செ.வெ.எண்: 07 /ஏப்ரல் நாள்: 05.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்
# இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் இன்று (05.04.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-இல், இராமநாதபுரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவினை எய்திட மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பணியாளர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதன்பின்பு மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 - இல் தவறாமல் வாக்களிப்போம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுவதோடு நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் சூழ்நிலை உண்டாகும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், வட்டாட்சியர் திரு.மாரி உள்பட ஓ.என்.ஜி.சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**